மலர் 2 இதழ் 2 அக்டோபர் 2017 ISSN – 2454-3993

# பாண்டியர்கள் கால திண்டுக்கல் பகுதியின் அதிகாரிகள் "பள்ளி வேளான்கள்"

**முனைவர் ப. சங்கரலிங்கம்**
**இணைப் பேராசிரியர்,**
**வரலாற்றுத் துறை, GTN கல்லூரி,**
**திண்டுக்கல்**

திண்டுக்கல் பகுதியானது வரலாற்று நகரங்களான மதுரை, கரூவூர் உறையூர் ஆகியவற்றின் மையத்தில் அமைந்துள்ளது. கடந்த சில ஆண்டுகளாக, இப்பகுதியின் வரலாற்றச் சிறப்புகளை வெளிப்படுத்தும் புதிய கல்வெட்டுகள் கண்டறியப்பட்டு வெளிவருகின்றன[1] மேலும் இப்பகுதியில் அமைந்துள்ள சிறுமலை, கோடைமலை, தான்றிகுடி, பன்னிமலை, பொதினிமலை ஆகியவற்றைச் சங்க இலக்கியங்கள் குறிப்பிட்டுள்ளன.[2] இப்பகுதியில் காணப்படும் கல்வெட்டுகளின் மூலமாக, பல நாட்டுப்பிரிவுகள் இருந்துள்ளதும், அவற்றின் தலைவர்களாக வேளான்கள் இருந்துள்ளதும் அறிய முடிகிறது. பாண்டியர் காலத்தில் இப்பகுதியில் பள்ளிநாடு, அண்டநாடு, ஆற்றூர் நாடு, நெடுங்கள நாடு, வைகாவியூர் நாடு, பெருங்கல் அல்லது பொங்கலூர் நாடு, கல்லக நாடு போன்றவைகள் இருந்துள்ளன. மேற்கூறிய பல்வேறு நாடுகளில், ஸ்ரீபெரும்பள்ளி என்ற ஊரை அல்லது நகரத்தை மையமாகக்கொண்டு பல நூற்றாண்டுகள் அதிகாரிகளாகச் செயல்பட்டு வந்த பள்ளிவேளான்கள் இக்கட்டுரையின் ஆய்வுப்பொருளாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். இவர்களைப் பற்றிக் கூறும் இராமநாதபுரம்[3], பெரும்புள்ளி[4], கல்வெட்டுகளோடு சமீபத்தில் கட்டுரையாளர் உள்ளிட்ட சிலர் கண்டறிந்துள்ள உலுப்பக்குடி நடுகல்[5], கரட்டுப்பட்டி நடுகல்[6], புளியமரத்துக் கோட்டை நடுகல்[7], தொட்டனம்பட்டி கல்வெட்டு[8], ஆவிளிப்பட்டி கல்வெட்டு[9], பிலாத்து கல்வெட்டு[10], பாடியூர் கல்வெட்டு[11] இவற்றோடு முன்கூறிய இராமனாதபுரம், பெரும்புள்ளி கல்வெட்டுகளை அடிப்படையாகக்கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வின் பொருட்டு திண்டுக்கல் பகுதியில் நிலவிய பாண்டியர்களின் நிர்வாகக் காலத்தை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. முதல் பாண்டியர் பேரரசு காலம் - கி.பி.600 முதல் கி.பி.1000 வரை (பாண்டிய-பல்லவ ஆதிக்க போராட்ட காலம், முதல் பாண்டிய பேரரசின் வீழ்ச்சி வரை)
2. சோழ பாண்டியர்களின் காலம் - கி.பி 1000 முதல் கி.பி.1190 வரை (சோழ பேரரசின் கீழ், சோழபாண்டியர் என்ற பெயரில் சோழ இளவரசர்கள் ஆட்சி செய்த காலம்)
3. இரண்டாம் பாண்டியர் பேரரசு காலம் - கி.பி.1190 முதல் கி.பி.1310 வரை (சோழர்களை வீழ்த்தி, எழுச்சியுற்ற பாண்டியர்களின் ஆட்சி காலம்)

### முதல் பாண்டியர் பேரரசு காலம் - கி.பி.600 முதல் கி.பி.1000 வரை

இக்காலத்தில் இவர்களின் செயல்பாடுகள் குறிப்பாக தொறுப்பூசல்களில் முக்கியத்துவம் பெறுவதைக் காணலாம். செங்கம் பகுதிக்குப்பின் தென் தமிழகப்பகுதியில் கிடைத்துள்;ள

தொன்மையான தொறுப்பூசலைக் குறிக்கும் மூன்று நடுகற்கள் பள்ளி நாட்டுப்பகுதியிலேயே கிடைத்துள்ளதை அடிப்படையாகக்கொண்டு பார்க்கும்போது இவர்களின் தொன்மையை அறியலாம். இவர்களின் எதிரிகள் இவர்களது ஆநிரைகளை கவர்ந்து செல்லமுயன்ற போது எல்லாம், அவர்களைத் துரத்திச்சென்று தடுத்துநிறுத்தி வெற்றி பெற்ற நிலையில் சில வீரர்கள் வீழ்த்தப்பட்டுள்ளனர். அவ்வாறு இறந்த வீரர்களின் பெயர்களை நடுகற்கள் குறிப்பிடுகின்றன.

1. பள்ளிவேளாசரிகன் - உலுப்பகுடி நடுகல்
2. மதுராந்தக பள்ளிவேளான் - கரட்டுப்பட்டி நடுகல்
3. நக்கம் காடன் மற்றும் ஸ்ரீகோடன் - புளியமரத்துக்கோட்டை நடுகல்

இவர்களை எதிர்த்து படைநடத்தி ஆநிரைகளைக் கவர்ந்திடும் முயற்சியில் ஈடுபட்டவர்கள் துவாரபதி நாட்டு படைநாயகன் காரிச்சாத்தன[12] மற்றும் ஸ்ரீஅரையர்[13] என்று மேற்கூறிய நடுகற்கள் குறிப்பிடுகின்றன.

உயிர் நீத்தவர்கள் பள்ளிநாட்டின் தலைவர்களாக அல்லது அவர்களின் உறவினர்களாக மற்றும் வீரர்களாக இருந்திருக்கலாம். இப்பகுதியில் அவர்கள் மேற்கொண்ட வேளாண்மை வளர்ச்சிக்கான பணிகள் மற்றும் வணிகத்தை வளர்த்திட்ட செயல்பாடுகளால் இப்பகுதி பொருளாதார வளர்ச்சி அடைந்திருந்தநிலையில் பள்ளிநாட்டை சுற்றியிருந்த துவாரபதி வேளான், அண்டநாட்டு வேளான், கரைகோட்டுநாட்டுவேளான் போன்றோர் இப்பகுதியில் தங்களது படையெடுப்புகளை பலமுறை மேற்கொண்டிருக்க வேண்டும். அதனை எதிர்த்து பள்ளிவேளான்களும் படைநடத்தியிருக்க வேண்டும் என்பதை முன்கூறிய நடுகற்கள் மூலம் அறிய முடிகிறது.

இதுபோன்ற நிகழ்வுகளில் அவர்கள் பெற்ற அரசியல் ஆதிக்கம், இப்பகுதியில் பாண்டிய அரசியலில் அரசியல் செல்வாக்கு மிக்கவர்களாக இவர்கள் எழுச்சி பெற்றதோடு, பாண்டிய மன்னர்களின் அதிகாரிகளாகவும், படைநடத்தும் தலைவர்களாகவும் இவர்களை மாற்றியது. அவ்வாறு அவர்கள் பெற்ற எழுச்சியைப் பின்வரும் நிகழ்வுகள் உறுதிபடுத்துகின்றன. அவர்களில் சிலரைப்பற்றிக் காணலாம்.

1. பள்ளிவேளான் புள்ளன் நக்கன் மாறவர்மன் இராசசிம்மன் காலம் (கி.பி.730 - கி.பி.769)
2. பராந்தக பள்ளிவேளான் அல்லது நக்கம் புள்ளன் முதலாம் வரகுணன் காலம் (கி.பி.768 - கி.பி.815 வரை)
3. பள்ளிவேளான் புள்ளன் நக்கன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் காலம் (கி.பி.815 - கி.பி.860 வரை)
4. பள்ளிவேளான் நக்கம் புள்ளன் இரண்டாம் வரகுணன் காலம் (கி.பி.863 - கி.பி.888 வரை)

பாண்டிய மன்னர்கள் தங்களை மாறன்சடையன், சடையன்மாறன் என்று அழைத்துக் கொண்டதைப் போல் பள்ளிவேளான்கள் தங்களது மரபினைப் புள்ளன் நக்கன், நக்கம் புள்ளன் என்று அழைத்துக்கொள்வது குறிக்கத்தக்கதாகும்.

நக்கன் என்பதற்கு சிவன் என்று பொருள்படும் என சோமலெ குறிப்பிடுகிறார். இப்பகுதியில் காணப்பட்ட பல சிவாலயங்கள் இவர்களது சைவ, சமயப் பற்றினை வெளிக்காட்டுவதாக அமையும். மேலும் இன்றும் திண்டுக்கல் - மதுரை தேசிய நெடுஞ்சாலையில் கொடைரோடு என்ற ஊருக்கு அருகே நக்கம்பட்டி என்ற சிற்றூர்

அமைந்துள்ளது. அவ்வூரின் மேற்கே காணப்படும் பெருங்கற்கால சின்னங்கள் அவ்வூரின் தொன்மையை வெளிப்படுத்துகிறது. ஆயினும் அவ்வூரில் இதுவரை கல்வெட்டுகள் எதுவும் கண்டறியப்படவில்லை.

1. பள்ளிவேளான் புள்ளன் நக்கன் பாண்டிய-பல்லவ ஆதிக்கப் போராட்டத்தில் பாண்டியன் இராசசிம்மன் சார்பாக மன்னிக்குறிச்சி, குறுவடை, பூவயலூர் போர்களில் ஈடுபட்டு இறுதியாக குழும்பூர் போரில் பல்லவ மன்னன் நந்திவர்மனை வெற்றி கொண்டான்[14]. ஆயினும் போர்க்களத்தில் இறந்து விட்டான். இவ்வெற்றிகளை வேள்விக்குடி செப்பேடுகளும்[15] புகழ்கின்றன.
2. பராந்தப் பள்ளிவேளான் அல்லது நக்கம் புள்ளன் இவன் தனது தலைவனான பாண்டியன் முதலாம் வரகுணனின் சிறப்புப் பெயரான பராந்தகன் என்னும் பெயரை தனது விருதுப் பெயராகச் சூட்டிக்கொண்டிருப்பது இவன் பெற்றிருந்த செல்வாக்கினை எடுத்துக்கூறுவதாக கூறலாம்.

காவிரி ஆறு மற்றும் கொள்ளிடம் ஆறுகளுக்கிடையே இருந்த இடையாற்று மங்கலம் (இடவை) போருக்கு பாண்டிய மன்னனுடன் படைகளுக்குத் தலைமை தாங்கிச் சென்றான். அப்போரில் பல்லவ மன்னன் நந்திவர்மன், கொங்கு மன்னன் அதியன் மற்றும் கேரளன் இணைந்த கூட்டணியை இவன் வென்றுள்ளான்[16]. மேலும் தொடர்ந்து ஆயிரவேலி, அயிரூர், புகழியூர் இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளதைச் சின்னமனூர் செப்பேடுகள் கூறுகின்றன[17]. இவ்வெற்றிகளின் விளைவாக மன்னனின் விருதுப் பெயரை தன்பெயரோடு இணைத்து அழைத்துக்கொள்ள இவன் அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும். இதனின் நீட்சியாகப் பல நூற்றாண்டுகளுக்குப் பின் மதுரை நாயக்கர் காலத்தில் மைசூர் படையெடுப்புகளை முறியடித்து வெற்றி பெற்ற சேதுபதி மன்னர், அரசர் திருமலை நாயக்கர் பெயரால் திருமலை சேதுபதி என்று அழைக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம். மேற்கூறிய நிகழ்வுகளை இப்பகுதியின் தனிச்சிறப்பாகக் கூறலாம்.

இவன் பள்ளிநாட்டில் தனது தந்தை நினைவாக புள்ளனேரி என்ற ஏரியை அமைத்து கற்களைக்கொண்டு அதன் கரைகளை வலிமைப்படுத்தி ஏரியின் நீரைப் பாசனத்திற்கு வெளியேற்ற குமிழியும் அமைக்க முற்பட்டு செயல்பட்ட நேரத்தில் இப்பணி குறைப்பணியாக முற்றுப் பெறாமல் நின்றுள்ளது[18].

3. பள்ளிவேளான் புள்ளநக்கன் மற்றும் அண்ட நாட்டு தலைவன் குறும்பர் ஆதித்தன் இருவரும் இணைந்து ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனுக்காக படைநடத்திச் சென்றுள்ளனர். விழிஞம், இடவை, திருக்கூடமுக்கு போர்க்களங்களில் வெற்றி பெற்றுள்ளனர். விழிஞம் என்பது திருவனந்தபுரத்தில் இருந்து தெற்காக 15 கி.மீ தூரத்தில் உள்ள ஊராகும். எனவே இவர்கள் பாண்டிய மன்னருக்காகப் பல்லவர்களை மட்டுமின்றி சேரர்களையும் வெற்றி கொண்டனர்[19].

அரிசிலாற்றங்கரை மற்றும் தெள்ளாற்றுப் போர்களில் வெற்றிபெற்ற பல்லவர்கள் தொடர்ந்து மேற்கொண்ட கொங்கு படையெடுப்பில் ஆனூர் போரில் பல்லவர்கள் தோல்வியுற்றனர். அதேநேரம் பாண்டியர்கள் இடவை மற்றும் திருக்கூடமுக்குப் போர்களில் வெற்றி பெற்றனர்[20]. இந்த புள்ளநக்கன் தனது தந்தையால் வெட்டப்பட்டுக் குறைபணியாக விட்டுச்சென்ற புள்ளனேரியை வடுகன் கூற்றன் மற்றும் அவனது மகனைக்கொண்டு அந்த பணியை முடித்தான்[21].

4. பள்ளிவேளான் நக்கம்புள்ளன் பாண்டிய மன்னன் இரண்டாம் வரகுணன் காலத்தில் நடைபெற்ற பாண்டிய வாரிசுரிமைப் போரில் மன்னன் தரப்பில் பங்கேற்றுப் பல வெற்றிகளைப் பெற்றுள்ளான். தனது பெரும்புள்ளி கல்வெட்டில் வரகண மகாராசாவிற்கு யானைப்படை நடத்திச்சென்று எதிரிகளுக்குத் துணையாக வந்த சிங்கள மன்னன் இரண்டாம் சேனனின் படைகளைச் சென்னிலம், அயிரைவனம், சாலக்கிராமம் ஆகிய போர்களில் வென்றும், இன்னும் பல உதவிகளைச் செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளான்[22].

இப்பள்ளி நாட்டில் வணிக அமைப்புகளின் செயல்பாடுகள் சிறப்புற்றுக் காணப்படுகின்றன. ஐந்நூற்றுவர் என்ற வணிக அமைப்பு பள்ளிநாட்டில் ஸ்ரீபெரும்பள்ளி பெருங்குளம் என்ற பெயரில் குளம் ஒன்றினை உருவாக்கி தூம்பு உள்ளிட்ட அமைப்புகளை ஐந்நூற்றுவர் அமைப்பின் வீரசேகரர் என்பவர் உருவாக்கி வைத்துள்ளதைத் தொட்டணம்பட்டி கல்வெட்டு வெளிப்படுத்துகிறது[23]. பெரும்பள்ளிக்கு அருகேயுள்ள பிலாத்து என்ற ஊரில் காணப்படும் வணிக கல்வெட்டில்[24] அப்பகுதியாகச் செல்லும் வணிக பொருள்களின்மீது விதிக்கப்பட்ட தீர்வைகளையும், அதனைக் கொண்டு செய்த பல செயல்களையும் விரிவாக கூறுகிறது.

இவற்றின்மூலம் பள்ளிவேளான்கள் மட்டுமின்றி இப்பகுதி வணிக அமைப்புகளும் நீர்பாசன வசதிகளை மேம்படுத்தி வேளாண்மையைப் பெருக்கியும் சமூகத்திற்கு உதவியும் வந்துள்ளதை அறியமுடிகிறது. மேலும் வணிகர்கள் தங்களது வணிகத்தின் மூலம் மகமைகள் வசூலித்து இப்பகுதியில் மக்கள் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். எனவே பள்ளிநாடு வேளாண்மை மற்றும் வணிகம் மூலம் பொருளாதார செழிப்புகொண்டு இருந்ததை உணரலாம்.

**இரண்டாம் கட்டம் - கி.பி.1000 முதல் கி.பி.1190 வரை**

ஆய்வுப்பகுதியின் இக்கட்டத்தில் பாண்டியா;கள் சோழர்களுக்கு கட்டுப்பட்ட நிலையில், சோழ இளவரசர்கள் சோழபாண்டியர்கள் என்று பாண்டிய நாட்டின் ஆட்சிப்பொறுப்பினை ஏற்றுள்ளனர். சமுத்திராப்பட்டி வணிகக் குழுவின் கல்வெட்டு விக்கிரமசோழபாண்டியன் பற்றிக் குறிப்பிடுகின்றது[25]. மேலும் சோழர்களின் அதிகாரிகள் மற்றும் குடிமக்கள் பாண்டிய நாட்டின் பல்வேறு பகுதிகளில் குடியமர்த்தப்பட்டு, சோழபாண்டியர்களின் ஆட்சிக்கு ஆதரவு சூழல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் பள்ளிநாட்டில் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனின் எட்டாவது ஆட்சி ஆண்டைக் குறிக்கும் இரு புதிய கல்வெட்டுகளின் மூலம் பள்ளிவேளான் மரபினா் தொடர்ந்து பாண்டிய அதிகாரிகளாகவும் பள்ளிநாட்டு தலைவர்களாகவும் இருந்துள்ளனா் என்பதை அறிய முடிகிறது. முன்கூறிய பாண்டியனின் படைத்தலைவன் சுந்தரபாண்டியனான பள்ளிவேளான் தனது பகுதியான குளத்தூரில் அவரது மனைவி எடுப்பித்த சிவன் கோவிலுக்குச் சில தானங்களைத் தந்துள்ளான். சடையவா்மன் ஸ்ரீவல்லபனின் மகன் சுந்தரபாண்டியன் தனது தந்தையோடு இணைந்து ஆட்சி செய்தாலும் (இளவரசனாக) அரசனாக ஸ்ரீவல்லபன் இருப்பதால் இக்கல்வெட்டு அவரது பெயரில் தொடங்குகிறது. இப்பள்ளிவேளான் தனது முன்னோர்களைப் போல அரசனின் பெயரைத் தனது சிறப்புப் பெயராக கொண்டிருப்பதனால் இம்மரபினரின் செல்வாக்கு தொடர்ந்து சீராக, சிறப்பாக இருந்து வந்துள்ளதை அறியலாம்[26]. மேலும் இக்கோவிலுக்கு குளத்தூரின் கிழாற்று ஊரோம் அமைப்பினா் மன்னனின் அதிகாரிகளும் தானங்களை வழங்கியுள்ளனா் என்பதை இப்பகுதி புதிய கல்வெட்டு குறிப்பிடுகிறது[27]. இதன்மூலம் பாண்டியர்கள் வலிமைகுன்றி

செல்வாக்கற்று இருந்த நிலையிலும் தங்கள் பகுதியில் தங்களது செல்வாக்கை ஓரளவு நிலைநாட்டியும் பாண்டியர்களின் எழுச்சி காலத்தில் இவர்களும் எழுச்சி பெறுவது இப்பகுதியில் இவர்களது செல்வாக்கு நிலையை நமக்கு உணர்த்துகின்றது எனலாம்.

**மூன்றாம் கட்டம் - இரண்டாம் பாண்டிய பேரரசு கி.பி.1190 முதல் கி.பி.1310 வரை**

ஆய்வுப்பகுதியின் இக்கட்டத்தில் பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுகள் திண்டுக்கல் பகுதியில் பரவலாகப் பல இடங்களில் காணப்படுகின்றன. அவை பின்வரும் மன்னர்களைக் குறிப்பிடுகின்றன[28].

1. முதலாம் மாறவர்மன் குலசேகரன் கி.பி.1190 - கி.பி.1224
2. முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கி.பி.1216 - கி.பி.1239
3. முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் கி.பி.1251 - கி.பி.1271
4. முதலாம் சடையவர்மன் வீரபாண்டியன் கி.பி.1253 - கி.பி.1274

ஆயினும் பள்ளிநாட்டுப்பகுதியில் பாடியூரில் காணப்படும் மிகப்பெரிய பாறைக் கல்வெட்டு ஆய்வாளரால் கண்டறியப்பட்டுள்ளது[29]. கல்வெட்டு பாறையின் தன்மை காரணமாக சிதைந்துள்ளதால் முழுமையாகப் படித்து அறியமுடியவில்லை. அக்கல்வெட்டில் சிவாலயம் எடுப்பித்தும், அதற்கு தரப்பட்ட தானங்களைக் குறித்தும்; அவற்றின் நிர்வாகம் குறித்தும் இறுதியில் பல்வேறு நபர்களின் பெயர்கள் வெட்டப்பட்டுள்ளதையும் கல்வெட்டு கூறுகிறது[30]. பாண்டிய எழுச்சி காலத்தில் இந்தப் பள்ளிவேளான்கள் பெரிய அளவிலான சிவாலயம் எழுப்பி பெரும் தானங்களை வழங்கியதும் அவற்றின் நிர்வாகம் குறித்தும் குறிப்பிட்டுள்ளனர்.

கி.பி.1301 ஆம் ஆண்டிற்குரிய பாண்டியனின் கோனேரின்மை கொண்டான் கல்வெட்டு திண்டுக்கல் மலைக்கோட்டையில் உள்ள சிவன் கோயிலில் காணப்படுகிறது. மன்னர்களை விட அதிகாரிகள் அல்லது சிற்றரசு மரபினர்கள் செல்வாக்கு பெற்றும் மன்னரின் அதிகாரம் கேள்விக்குறியாக மாறக்கூடிய அளவில, மக்களிடம் தங்களது வலிமையைக் காட்டவும், அதிகார மரபினர்களை அச்சுறுத்தும் நோக்கில் இத்தகைய கோனேரின்மை கொண்டான் கல்வெட்டு பாண்டிய மன்னரால் வெளியிடப்பட்டிருக்க வேண்டும் என்று எ.சுப்பராயலு கருதுகிறார்[31]. இந்நிலையானது இவர்களின் அரசியல் பெருமை, செல்வாக்கு ஆகியவற்றை உணர்த்துகின்றது. மேலும் அரசனின் அதிகாரத்தையும் சில நேரங்களில் இவர்கள் விஞ்சிநின்றனர் என்பதை கோனேரின்மை கொண்டான் கல்வெட்டுகள் எடுத்துக்காட்டுகின்றன.

**இவ்வாய்வின் சிறப்புகள்**

தமிழகத்தில் பேரரசுகள் எழுச்சி பெறவும், நிலைபெறவும், வீழ்ச்சியடையவும் காரணமாக திகழ்ந்த இனக்குழுத் தலைவர்கள், சிற்றரசர்கள் அல்லது அதிகார மரபினர் குறித்த வரலாற்று ஆய்வுகள் அதிகரிக்கும்போது தமிழக வரலாற்றில் புதிய பார்வையும், பரிணாமமும், பொலிவும் அதிகரிக்கும் எனலாம்.

இந்தப் பள்ளிவேளான்கள் மேய்ச்சல் மற்றும் வேளாண்மைத் தொழிலை மேற்கொண்ட இனக்குழுவாக அல்லது சமூகமாக காணப்படுகின்றனர். பல்வேறு சூழல்கள் இவர்கள் ஒரு நாட்டு நிர்வாகப் பகுதியின் தலைவர்களாக எழுச்சி பெறுகின்றன. இவர்கள் தொறுப்பூசல்களின் ஈடுபாடுகொண்டது இவர்களை வீரமரபினர்களாக எழுச்சிபெற அடிப்படையாயிற்று.

பாண்டிய பேரரசின் வடக்கு எல்லையில் இவர்கள் இருந்ததனால் பாண்டியர்களின் படைநாயகர்களாக அரசனின் மந்திரிகளாக அரசியல் ஆதிக்கம் பெறும் இவர்கள் தங்களது

பகுதியில் சிறப்பான கட்டமைப்புகளை உருவாக்கின்றனர். ஆறுகள், இல்லாத நிலையில் பல்வேறு குளங்கள், ஏரிகள் அமைக்கப்பட்டு நீர்பாசன வசதிகளை மேம்படுத்தியதால் இப்பகுதியின் வேளாண்மைத் தொழில் பெருகியது. அதேநேரம் வணிகத்திற்கு இவர்கள் வழங்கிய ஆதரவின் காரணமாக ஐந்நூற்றுவர், சித்திரமேழி உள்ளிட்ட வணிக அமைப்புகள் எழுச்சியும், வணிகமும், தொழிலும் எழுச்சி பெற்றன. வணிகர்கள் தங்களுடைய வணிக பொருள்களுக்காக செலுத்திய மகமை மற்றும் வரிகள் மூலம் இப்பகுதியின் பொருளாதார நிலை மேம்பாடு அடைந்து உள்ளது. ஆய்வுப்பகுதியில் ஊர் மற்றும் சபை அமைப்புகள் செயல்பட்டு வந்துள்ளதையும், அவற்றின் மூலம் அதிகாரப்பரவல் கோட்பாட்டை வேளான்கள் செயல்படுத்தியுள்ளனர். இவர்கள் இப்பகுதியில் பல சிவாலயங்களை எடுப்பித்தும் அவற்றைப் பராமரிக்கவும் தானங்களை வழங்கியும் உள்ளனர். பாண்டிய மன்னர்களின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டு இருந்தாலும், இவர்களே பகுதியில் செல்வாக்கு மிக்கவர்களாக விளங்குவதையும், சில நேரங்களில் சுயாட்சி கொண்டிருப்பதையும், பாண்டிய மன்னர்கள் தங்களது வலிமையைக் காட்டிட கோனேரின்மை கொண்டான் கல்வெட்டுகளை வெளியிட்டு சமூகத்திலும், அரசியலிலும் அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு இவர்கள் ஆதிக்கம் பெற்று விளங்கினார்கள். இதுபோன்ற ஆய்வுகள் அதிகரிக்கும்நிலையில் தமிழக வரலாற்றிற்கு அவை வலுச்சோத்திடும் என்பதில் ஐயமில்லை.

**குறிப்புகள்**

1. திண்டுக்கல் பகுதியில் களப்பணியின்போது பல கல்வெட்டுகள் கண்டறியப்பட்டு அவை பதிப்பிக்கப்பட்டுள்ளன.
    1. சித்தையன்கோட்டை
    2. ஆவிளிப்பட்டி
    3. உலுப்பக்குடி
    4. மேட்டுக்கடை
    5. பாடியூர்
    6. கொத்தபுளி
    7. ரங்கமலை
    8. அகரம்
    9. ராமராஜபுரம்
    10. நல்லமனார் கோட்டை
    11. வேடபட்டி
    12. புளியமரத்துக்கோட்டை
2. சிலப்பதிகாரம் 2:11:85 சிறுமலை திகழ்ந்து தோன்றும்
   2:14:88 சிறுமலை சிலம்பின் செங்க தாளமொடு
   அகநானூறு 43:16-17 மழை விளையாடும் வளம்கெழு சிறுமலை சிலம்பின் கதளங் கமமுங் வெற்பின்.
3. K.G.Krishnan,"Two Pandya inscriptions from Dindigul", E.I.vol.XXXII No 31 P.P 268-275.
4. மேலது
5. உலுப்பக்குடி நடுகல் ப.சங்கரலிங்கம், திண்டுக்கல்.
6. வி.பி.யதிஸ்குமா; “புளியமரத்துக் கோட்டை நடுகல்” ஆவணம் 19, ப.1

7. நாககணேசன் திண்டுக்கல் பகுதியில் சில கல்வெட்டுகள், ஆவணம் 18, ப.21
8. நாககணேசன் - மேலது
9. ப.சங்கரலிங்கம் களப்பணியின் போது கண்டறியப்பட்டது.
10. சீதாராம் குருமூர்த்தி - திண்டுக்கல் மாவட்டத் தொல்லியல் கையேடு,
11. (பதிப்பு) தமிழ்நாடு அரசுதொல்லியல் துறை, சென்னை. பக்.182-184
12. ப.சங்கரலிங்கம் களப்பணியின் போது கண்டறிந்தது.
13. உலுப்பக்குடி நடுகல்
14. கரட்டுப்பட்டி நடுகல்
15. ம.இராசசேகர தங்கமணி, பாண்டியர் வரலாறு, தமிழ்நாடு அரசு பாடநூல்
16. நிறுவனம், சென்னை. 1978 பக். 547-548.
17. வேள்விக்குடி செப்பேடு 39-46, "பாண்டியர் செப்பேடுகள் பத்து" தமிழ்
18. வரலாற்றுக் கழகம், சென்னை. 1967 ப.23-24.
19. மு.பு.கிருஷ்ணன் - மேலது
20. சின்னமனூர்ப் பெரிய செப்பேடு 107-112, மு.கு.நூல் பக்.154-155.
21. மு.பு.கிருஷ்ணன் - மேலது, ப. 275.
22. மேலது, பக்கம் 272-73.
23. மேலது, பக்கம் 273-74.
24. மேலது, பக்கம் 270
25. நாககணேசன் - முன்குறித்தது.
26. சீதாராம் குருமூர்த்தி - பக்.182-184 (இன்று இக்கல்வெட்டு மதுரை காந்தி மியூசியத்தில் வைக்கப்பட்டுள்ளது.)
27. வெ.வேதாசலம்.- சமுத்திராபட்டி வீராதவளம் கல்வெட்டு ஆவணம் 2, தமிழக தொல்லியல் ஆய்வுக்கழக வெளியீடு, திருச்சி 1992. ப.6-9.
28. ப.சங்கரலிங்கம் களப்பணியில் ஆவிளிபட்டியில் கண்டறிந்த புதிய கல்வெட்டு.
29. ப.சங்கரலிங்கம் களப்பணியின் போது பாடியூரில் கண்டறிந்தது.
30. மேலது. எ.சுப்பராயலு, "கோனேரின்மைக் கொண்டான்" கல்வெட்டுகள் ஒரு மீள்பார்வை.